Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.NO. 1935/2024
DEPOSITION OF DEFENSE SIDE EVIDENCE No. 01 Page.No. 27/25

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சலீம் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. மொய்தீன் | தொழில் | வியாபாரம் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 07th day of February 2026.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எ. சா.1 திரு. சலீம் முதல் விசாரணை.-**

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். ஆர்டுவர்ஸ் மற்றும் பிளைவுட் வியாபாரம் செய்துவருகிறேன். கடந்த 2011 ஆண்டு நானும் புகார்தாரரும் திருப்பத்தூரில் கவுன்சிலராக ஒன்றாக பணியாற்றினோம். அதனால் எனக்கு புகார்தாரருக்கும் நல்ல பழக்கம் ஏற்பட்டது. புகார்தாரர் மாறன் புட்வேர் என்ற பெயரில் செறுப்பு கடை வைத்திருந்தார். நான் ஆர்டுவார் பிளைவுட் கிளாஸ் கடை வைத்திருந்தேன். நாங்கள் இருவரும் பரஸ்பரம் அவரவர் கடைக்கு சென்று வருவோம். நாங்கள் இருவரும் நன்றாக பழகி வந்த சமயத்தில் நான் பிளைவுட்டில் ரீட்டையில் வியாபாரம் செய்து வந்தேன். அப்போது புகார்தாரர் நாம் இருவரும் சேர்ந்து பிளைவுட்டில் மொத்தம் வியாபாரம் செய்யலாம் என்று யோசனை கூறி கேரளாவில் இருந்து சரக்கை என் GST மூலம் எடுத்துவருவோம். பொதுவாக கேரளாவிற்கு புகார்தார் தான் சென்று சரக்கு எடுத்துவரும் வேலைகளை செய்வார். அப்போது சரக்கு வாங்கிவருவதற்காக புகார்தாரரிடம் பல கையொப்பமியிட்ட நிரப்பபடாத காசோலைகளை கொடுத்துள்ளேன். அந்த வியாபாரத்திற்கு உண்டான இலாப நஷ்டங்களை புகார்தாரர் தான் பார்ப்பார். மேலும், வரவு செலவையும் அவர் தான் பார்த்து வந்தார். வரவு செலவு கணக்குகளை புகார்தாரரே வைத்துக்கொண்டு என்னிடம் எந்த கணக்குகளையும் காண்பிக்கவில்லை. சில ஆவணங்கள் என்னிடம் இருந்தன. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பின்பு கொரோனா

பெருந்தொற்று காலத்தில் வியாபாரம் இல்லாததால் நஷ்டம் ஏற்பட்டு வியாபாரம் அவ்வாறே நின்றுவிட்டது. நாம் இருவரும் சேர்ந்து தானே வியாபாரம் பார்த்தோம். எனவே இருவரும் நஷ்டத்தை பங்கிட்டு கொள்ளவேண்டும் என்று கூறினேன். ஆனால் புகார்தாரர் அதை ஏற்காமல் பணம் தருமாறு எனக்கு தொந்தரவு கொடுத்தார். அதனால் G-pay மூலம் புகார்தாரருக்கு பணம் அனுப்பினேன். பின்பு திடிரென்று புகார்தார் என்னை மிரட்டினார் நான் பார்த்துகொள்கிறேன் என்று கூறினார். பின்பு ஒருநாள் திடிரென்று இந்த வழக்கு காசோலை திருப்பபட்டுள்ளதாக வங்கியில் இருந்து தகவல் கிடைத்தது. ஆந்திராவில் நான் வைத்துள்ள கடைக்கும் வந்து புகார்தாரர் பணம் கேட்டு தொந்தரவு செய்தார். அதற்கு நான் என்னிடம் பணம் ஏதும் இல்லை என்றும், என்னால் முடிந்தால் கண்டிப்பாக பிற்காலத்தில் கொடுப்பாதாக கூறினேன். நான் புகார்தாரரிடம் எந்த பணமும் பெறவில்லை. பிளைவுட் சம்பளை செய்த போது புகார்தாரர் தன் கைப்பட எழுதிக்கொடுத்த கணக்கு விவரங்கள் அசல் தாக்கல் செய்கிறேன். **(அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் புகார்தாரர் உடையது அல்ல என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால் ஆட்சேபனையுடன் என்னால் எ.சா.ஆ. 03 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** ) புகார்தாரர் பிளைவுட் சரக்கு வாங்குவது சம்மந்தமாக கேரளாவிற்கு சென்ற போது ஏற்பட்ட செலவாக எனக்கு அவர் கையால் எழுதிக்கொடுத்து கணக்கு அசல் தாக்கல் செய்கிறேன். **(அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் புகார்தாரர் உடையது அல்ல என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால் ஆட்சேபனையுடன் என்னால் எ.சா.ஆ. 04 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** ) புகார்தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No.1
Thirupattur.